# தூது 6

## பரிமாற்றம்

சமீப காலத்து கவியரங்குகளை அவதானிக்கும்போது மண்டையை உடைத்துக் கொள்ளலாம் போலுள்ளது. கவியரங்குகளில் முன்பெல்லாம் கவிதைகளே வாசிக்கப்பட்டன. இப்போது கசையடிகள் விளாசப்படுகின்றன. ஒரு கவியரங்கில் மூன்று கவிஞர்கள் பங்குபற்றினால், அதிலும் ஒருவர் மரபுக்கவி, மற்றவர் புதுக்கவி, மூன்றாமவர் வெறும் கவி.... இனியென்ன? இது போதாதா இழுபறிப்பட?

கவியரங்கு உடனேயே ''சூடு'' பிடித்துவிடும். தலைமைக் கவிஞருக்கும் நல்ல சூடு கிடைக்கும். அவர் என்ன விடுவாரா? இறுதியில் எல்லாவற்றையும் சேர்த்துவைத்து அறுப்பார். அத்தோடு முடிந்ததா? ஒருவர் கவி பாடும்போது மற்றவர் எழுந்து குறிப்பிட்ட ஒரு சொல்லுக்கு விளக்கம் கேட்பார். அல்லது ஒரு உவமானம் அல்லது ஒரு படிமம் பிழையென்பார். இதிலேயே ஒரு மணி நேரம் பஞ்சாய்ப் பறக்கும். எல்லாத் தடங்கலையும் சமாளித்து தலைவரும் தன் சாமர்த்தியத்தை கவிதையில் காட்டி வித்துவச் செருக்குடன் கூட்டத்தை முடிப்பார்.

இனியாவது முடிந்ததா பிரச்சினை? வெளியில் வைத்து மறுபடி கவிப்போர். என் கவிதைதான் சிறந்தது என்ற மமதை. ஒவ்வொரு கவிஞனும் வெட்கித் தலைகுனியவேண்டிய செயல்கள் கவியரங்கு என்ற போர்வையில் நிகழ்கின்றன. சக கவிஞனைத் தாக்குதல், அவனது கவித்துவத்தைக் குறைத்து மதிப்பிடுதல். என்பனவெல்லாம் வித்துவச் செருக்கைத்தான் (?) வெளிப்படுத்தும். கவியரங்குகளில் கயவர்களைப் பாடவிடுவது யார் தவறு? சொந்தக் கோபதாப அஜீரணங்களைகவியரங்குகளில் வாந்தியெடுக்கின்ற அசிங்கங்களை அனுமதிப்பது யார் குற்றம்?

அத்தகையோர் இனித உணருகிறவரைக்கும் அவர்களை கவியரங்குகளில் கவிபாடவிடக்கூடாது. இதை ஒவ்வொரு கவியரங்கு ஏற்பாட்டாளரும் செயற்படுத்தும் பட்சத்தில் அதுவே அவர்களுக்கு சரியானதொரு தண்டனையாக அமையும் அல்லவா? (ஆ-ர்)

அன்பளிப்பு ரூ. 1/-

வெளியீடு: புதுமை கலை இலக்கிய வட்டம் (1985 ஜனவரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுச்சி.

... சித்தி ஜெரினு கரீம்

புதுமைகள் செய்த
சமூகத்தில் பிறந்தவர்
எழுச்சியும் வளர்ச்சியும்
பெற்று
உயர்நிலை முகித்த போது
உயிரும் உணர்வும்
பெற்ற நிலை... இன்று.
ஸ்தம்பித்திருப்பதா ...
இதற்கொரு தீர்வு
இருப்பவர் கரம்
எழுச்சியுறுகிறது
புதியதாய் உதயமாகிறது!

## போடி பதறுது...

... மு கம்மது அலிக்கான்

மாரி மழை இது - வயல்
நாறி நனையுது
போடி பதறுது - அவர்
பொக்கிஷம் காயுது

'ஈராண்' சுறுக்சவே -போடி
ஈரல் வெடிசகுது
ஜலப் போருக்தொடங்கவே
ஜன்னல் மூடி அடைக்குது

இல்லாள் ஏதோ உரைக்கவே
போடி ஏசித் தொலைக்குது
மீண்டும் மழை வர
போடி ஓடித் திரியுது

எப்போ தீரும் இந்தப்
பார் எழியும் பாவி மழை
மனப்பாரம் தணிந்திடுமோ
போடி பொக்கிஷம்
வீங்கிடுமோ......

## அணை

... மஷுஹூரு ஏ. மஜீட்

எங்கள் தயக்க வீட்டு
மௌனக் கூரையில்
கருணை ஓட்டைகள்
இருப்பதனுலா... உங்கள்
அதிகார மழைகள்
எங்கள் இதயத் தரையில்
ஒழுகி...
அடிமைக் கசிவினை
ஏற்படுத்தியது..
அதிகார மழைகள்
இடையறுது பெய்து
ஆணவ வெள்ளத்தை
ஏற்படுத்து முன்
அணைகட்டவென்று
எழுந்த மண்ணு
பேரு மண்வெட்டியும்
எம் பொறுமைக் கரங்களில்
ஏந்தப்பட்டு விட்டன

## ஞானம்

... நி. இராஜம் புஷ்பவனம்

காலம் பின்னிய
கானல் வாழ்வின்
கோலம் யாவும் அழிந்தபின்
ஞாலம் போற்றும்
நல்ல ஒளியை நாடுவதே
மானிட வாழ்க்கை

## சிவப்பு

... நி. இராஜம் புஷ்பவனம்

தோட்டத் தொழிலாளி
மேனியின் இரத்தம்
மண்ணில் சிந்தி
தேயிலை வேரில்
ஊறி வருவதாலா
தேனீர் கூட
சிவப்பாய் இருக்கிறது?

## கடைசி நிமிடம்

நீ......
என்னைப் பிரிந்து
இதயம் மறந்து
போகையில்......
நான்
என்னை இழந்து
ஊமை யாகி
விடைதருவேன்!

என்
காதல் வனத்தில்
நானே கொய்த
பூக்களினை ..
நீ
போகும் பாதை
எங்கும் தூவிப்
பரப்பிடுவேன்

அந்த
நறுமணம் வீசும்
மலர்களின் மீது
நடக்கையிலே...
உன்
பாதச் சுவடினை
மெது மெது வாகப்
பதியவிடு!

நீ
என்னைப் பிரிந்து
இதயம் மறந்து
போகையிலே ..
என்
இதழைக் கடித்து
விழியின் நதிக்கு
அணையிடுவேன்!

ஆங்கிலத் தழுவல்:
எச். ஏ. அஸீஸ்

நன்றி: தமிழ்த்தென்றல்

## தூக்கம்

கர்ப்பப் பருவத்திலே-தாயின்
கருவறையில் ஒரு தூக்கம்
குழந்தைப் பருவமதில்
குளறிவிட்டு ஒரு தூக்கம்
மழலையாயிருந்தால் பார்ப்பவர்கள்
மடியில் எல்லாம் ஒரு தூக்கம்
பள்ளிப் பருவத்திலே
பாட நேரத்தில் ஒரு தூக்கம்
காளைப் பருவத்திலே - இளம்
கன்னியரை நினைத்தொரு
தூக்கம்
வாலிபப் பருவமதில் - தன்
வாழ்வையெண்ணி ஒரு தூக்கம்
திருமணம் முடித்துவிட்டால்
— அவள்
திருமடியில் ஒரு தூக்கம்
முதுமையடைந்து விட்டால்
முடி நரைத்த ஒரு தூக்கம்
முடியாத காலமதில்
முடங்குமிடமெல்லாம் ஒரு
தூக்கம்
நிலைமையெல்லாம் முடிந்து
விட்டால்
நிரந்தரமான ஒரு தூக்கம்.

— சமமாந்துறை ஆயிஷா றஸீட்

## வாழ்வு ?

நாங்கள்
ஏழ்மைக் கொடியில்
பூத்த மலர்கள்
எமக்கு
அழகுண்டு செல்வமில்லை
குணமுண்டு பணவாசமில்லை
புன்னகையுண்டு
பொன்னகையில்லை
இதனுல்
வாழ்வு மாலையின்
சீதனச் சரத்தில்
ஒரு மலராய்
இடம் கிடைக்கவில்லை.

மாத்தரைச் செல்வி ஸெமீனு சஹீட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தஸ்தின் அத்திவாரம்.

... திக்குவல்லை ஸப்வான்

ஓ... எங்கள் எஜமானர்களே
உங்கள் மாளிகையின் தரை
பளிச்சிடும்
பளிங்குத் தரைதான்
ஆனால்-
அதன் கீழ் இருப்பது
வெறும் மண்தான்
உங்கள் மாளிகை
மூன்றடுக்கு மாளிகைதான்!
அதன் அடித்தளம்
வெறும் கல்தான்
பெரு வாழ்வாக
நீங்கள் மிதக்கின்ற
அந்தஸ்த்துக்கு
கல்லும் மண்ணும் கலந்த
அத்திவாரமாயும்
குழைத்துக் குழைத்துச்
சேர்த்த
உழைப்பின் பூச்சாகவும்
நாமில்லாதிருந்தால்
இன்று
உங்கள் அந்தஸ்த்து எங்கே?

## நிலை

... நற்பிட்டிமுனை பளீல்

பங்களா இரண்டு
பல ஏக்கர் நிலங்கள்...
வங்கியில் கணக்கு...
கோடியாய் நகைகள்...
எல்லாவற்றையும்
ஏப்பம் விட்டு
சொந்தங்களை
சோகத்திலாழ்த்தி...
துயில்கிறான் - அதோ...
பிணமாக......!

## தீர்க்கப்படும் கணக்கு.

... மு. மெத்தா (தமிழ் நாடு)

● மறு பிரசுரக் கவிதை - 9

கணக்குப் பாருங்கள்
எத்தனை ஆயிரம் தலைகள்
காணாமல் போனதென்று...

எண்ணிப் பாருங்கள்
எத்தனை நூறு கட்டிடங்கள்
எரிந்து போனதென்று

அரசாங்கங்கள் கொடுக்கும்
அறிக்கைகளை நம்பாதீர்கள்
எந்த அரசாங்கத்துக்குத்தான்
சரியாக 'எண்ணிப்'
பார்க்கத் தெரியும்?

தாயும் தந்தையும்
எரிந்து கருகிப் போன
சாம்பலை எடுத்து
பல் துலக்கிக்கொண்டிருக்கும்
அந்தப்
பச்சைக் குழந்தையின்
கண்களில் பாருங்கள்
சரியான கணக்கு
எழுதப்பட்டிருக்கிறது...

அந்தக் குழந்தை
கொஞ்சம் வளர்ந்ததும்
படிப்பதற்கு
புத்தகம் கேட்காது
பிடிப்பதற்கு
துப்பாக்கி கேட்கும்

★ ● நன்றி ஆனந்த விகடன் - (1984) இதழ்.

## அஜீரண நினைவுகள்

... கடோத்கஜன்

ஆம்......!
ஞாபகமிருக்கிறது...
அன்று
புளியங் கொட்டைகளோடு
விளையாடியதும் - இடையில்
கிள்ளிவிட்டு ஓடியதும்
மீண்டும் 'பழம்' விட்டு
பள்ளியில் வைத்து
கடலையைப் பகிர்ந்ததும்...
சில காலத்தில்
அர்த்தமற்று மணிகணக்கில்
ஒருவரையொருவர்...
பார்த்திருந்ததும்...
முடிவில்
ஒரு கடிதம் தந்ததும்
'சட்' டென
காதல் வாகனத்திலேறி
வெகுதூரம் பயணித்ததும்
விரகத்தில் தீய்ந்தும்... ...
குளிரும் ராத்திரிகளில்
ரகஸ்யச் சந்திப்புகளில்...
விரகத் தீயை அணைத்ததும்
ஞாபகமிருப்பது
இவை மட்டுமல்ல-
நீ...., இப்போது
இன்னொருத்தன் மனைவி
என்பதும்தான்..!

## பசி

... தம்பிலுவில் ஜெகா

பதியை இழந்ததனால்
வறுமைப் புயலின்
வசமான வனிதையிவள்
வயிற்றுக்கு வழியின்றி
ஆடவரின் உடற்பசிக்கு
அவளுடலை உணவாக்கி
தன்னிரு குழந்தைகட்கும்
வெறுஞ்சோறு ஊட்டுகிறாள்

## உணர்வாயா.?

... எம். எம் எம். நூறுல் ஹக்
சாய்ந்தமருதூர்

என் இதயத்தை... நாடிய
நங்கையர் பலர்
ஏனோவென் மனம்
இடம் நல்கிட மறுத்தது
ஆனால்......
அந்த ஒரு சந்திப்பில்
உன் காந்த விழிப்பார்வையில்
எனையிழந்தேன்
அன்றிலிருந்து ... உன்
நினைவுகள் என் நெஞ்சில்
சுமக்க முடியாத
சுமையாய் ஆகின......

## மறுபடி ஒரு நாளில்.,

... எஸ் எம் எம் ருபீக்

இளமைக் காலத்தின்
இனிமையான இலயிப்பில்
இளஞ்சோடிகளாய்
இதயங்களை இணைத்தோம்
கல்லூரி வாழ்க்கையும்
கடந்து விட்டது
நீயோ 'ஓட்டோகிராபு'டன்
பிரிந்து சென்றாய்......
பின்னர்... உன்,
முகச் சந்ரோதயம் - என்
எண்ண வானில்
அமாவாசையாயிற்று
தேடிய நாட்களோ
மாதங்களாய்ச் சுழன்று
வருடங்கள் பலவாயின
மறுபடி ஒரு நாளில்..
உன்னைக் கண்டேன்
வழியில்லை.....
என் வாழ்வில் முதலாய்
நான் சென்ற
விபச்சார விடுதியில்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ மடல்விடுதூது ★

### மலரா அது?

கடந்த இதழை ஆண்டு மலராக வெளியிட்டீர்கள். சில கூழாங்கவிகளும், புலம்பல் ஒலிகளும்.... மலர் முழுவதும் ஒரே அசிங்கம். இரண்டே இரண்டு கவிதைகள்தான் ஓரளவு பரவாயில்லை. மலரா வெளியிட்டீர்கள்....?

ஜெயந்தி கிருஸ்ணன்
காரைநகர்

### குப்பை!

சில குப்பைக் கவிதைகளை தாள்களில் நிறைத்து கவர்ச்சியாக அட்டை போட்டுவிட்டால் தூது ஆசிரியர் பெரிய இலக்கியவாதி ஆகிவிடுவாரோ முதலில் அவரும், அவரது இணை ஆசிரியரும் முறையாகத் தமிழ் படிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். நீங்கள் ஆக்க இலக்கியம் என்று என்ன செய்திருக்கிறீர்கள் என்பதுதான் என் கேள்வி?

கலைக்கமர்தீன்
பொலன்நறுவை

### மோசம்!

அட்டை மோசம். அடக்கங்கள் அதைவிட மோசம். காதோரம் சரியான அறுவை. பரிமாற்றம் புளித்துப்போன கரு.

நளாயினி சிவத்தம்பி
யாழ்ப்பாணம்

### புதுமை!

தூது ஆண்டு மலர் கண்டேன். காத்திரமிக்க கவிதைகள். துணிச்சலான ஆசிரியர் கருத்து, ஆகியவற்றோடு எம். ஆர். சுமனின் காதோரம் மிகப் பிரயோசனமான கட்டுரையாகும். என். ஏ. தீரன், எச். ஏ. அஸீஸ், செ. குணரத்தினம், மெஹ்ருன் நிஸா ரிஸாட் ஆகியோரின் கவிதைகள் உன்னதமான படைப்புக்களாகும். மொத்தத்தில் தூது ஆண்டு மலர் இலக்கியப் பரப்பின் ஒரு அழியாத சுவடு.

ஷம்றேஸ் அஹமட்
களுத்துறை


### ★ தூது

''இலக்கியத் தூதே
இலட்சியத் தூது...''

ஆசிரியர்:
ஆர். எம். நௌஸாத்

நிர்வாக ஆசிரியர்:
எஸ். எ. எம். ருபீக்

அலுவல்கள்:
503, பிரதான வீதி,
சாய்ந்தமருது-01.

வெளியிடுபவர்:
கல்முனை கலீல்

அச்சகம்:
கத்தோலிக்க அச்சகம்
மட்டக்களப்பு.



### அதிர்ஷ்ட சாதகம்

தொழில், குழந்தைச் செல்வம், திருமணம் பெறவும், தீராநோய், கடன் தீரவும், உங்கள் பெயர்களினாலும் அன்னை வீரமாகாளியருளினாலே யும் அமைத்து அதிர்ஷ்டகரமாக்குவோம். நேரிலோ சுயவிலாசமிட்ட முத்திரைக் கவருடனோ தொடர்புகொள்ளுங்கள்.

திருமதி N. காயத்திரி
திருக்கேதீஸ்வரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org